## இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சிறப்புக் கூட்ட அறிவிப்பு

2024–ஆம் வருடம் மார்ச் மாதம் 08–ஆம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சிறப்புக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 06.03.2024

தலைவர்,
நகர் மன்றம்.

## பொருள்கள்

(1) இந்நகராட்சி 2024–2027–ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் குத்தகை இனங்கள் மற்றும் தினசரி மார்க்கெட் கடைகள் ஆகிய ஏல இனங்களின் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு 08.03.2024 அன்று காலை 11.00 மணிக்கு மற்றும் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக தேர்தல் நன்னடத்தை விதிகள் எந்த நேரமும் நடைமுறைக்கு வரும் என்பதால், நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாமலிருப்பதை கருத்திற்கொண்டும் மேற்காணும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ஏலம் உரிமம் பெற்றவர்களுக்கு ஒப்படைப்பு உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2023/22/அ2)

**தீர்மானம் எண். 577**

**2024–25 முதல் 2026–27 முடியவுள்ள 3 ஆண்டுகளுக்கான சுங்கம் மற்றும் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில்**

1) புதிய பேருந்து நிலைய இரு சக்கர வாகன கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு வரப்பெற்ற உட்சபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு S. கார்த்திகேயன், த/பெ. சுப்பிரமணி
2) பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு வரப்பெற்ற உட்சபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு A. மோகன், த/பெ. மு. அங்கமுத்து
3) பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு வரப்பெற்ற உட்சபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி மு. சாந்தி, க/பெ. கந்தசாமி
4) புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு வரப்பெற்ற உட்சபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு சு. ராஜா,

ஆகியவர்களின் ஏல உரிமத்தை அங்கீகரித்தும்,

இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்கெட் வணிக வளாகத்திலுள்ள நிரந்தரக் கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டு உயர்ந்தபட்ச ஏலக் கேள்வித் தொகை கோரிய பின்வரும் ஏலதாரர்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1 | தினசரி அங்காடி கடை எண். 7 | 4100 | பி. சரவணன் |
| 2 | தினசரி அங்காடி கடை எண். 8 | 4200 | எஸ். கார்த்திகேயன் |
| 3 | தினசரி அங்காடி கடை எண். 9 | 3600 | பி. மாதேஸ்வரன் |
| 4 | தினசரி அங்காடி கடை எண். 10 | 3550 | பி. மாதேஸ்வரன் |
| 5 | தினசரி அங்காடி கடை எண். 11 | 3450 | டி.டி. ஸ்ரீசாய்சரண்யா |
| 6 | தினசரி அங்காடி கடை எண். 12 | 3450 | டி.டி. ஸ்ரீசாய்சரண்யா |
| 7 | தினசரி அங்காடி கடை எண். 13 | 3650 | எ. மாரிமுத்து |
| 8 | தினசரி அங்காடி கடை எண். 19 | 3650 | எஸ். கார்த்திகேயன் |
| 9 | தினசரி அங்காடி கடை எண். 20 | 3600 | பி. கரிகாலன் |
| 10 | தினசரி அங்காடி கடை எண். 26 | 3800 | கௌரிசங்கர் |
| 11 | தினசரி அங்காடி கடை எண். 28 | 3600 | எஸ். மணிமேகலை |
| 12 | தினசரி அங்காடி கடை எண். 29 | 3550 | பி. வேல்முருகன் |
| 13 | தினசரி அங்காடி கடை எண். 49 | 4550 | எ. சுதா |
| 14 | தினசரி அங்காடி கடை எண். 50 | 11200 | கே. ராஜா |
| 15 | தினசரி அங்காடி கடை எண். 52 | 3350 | எஸ். அருள்முருகன் |
| 16 | தினசரி அங்காடி கடை எண். 56 | 3300 | இரா. விஜயகுமார் |

ஆகியோரின் ஏல உரிமத்தை அங்கீகரித்தும், ஏல உரிமம் வழங்கவும் அனுமதிக்கப்படுகிறது.

(2) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 20, காலணி பழனி சந்து பகுதியில், ச.வார்டு – B, பிளாக்– 6, நகர புல எண்.63/1A,1B,2,3,4 மற்றும் 136/1A1A Part (பழைய சர்வே எண். 299/1pt.6pt)–இல் மனுதாரர் திரு எம். ராஜீ, திருமதி தமிழரசி, திரு ஆர். கௌதம் மற்றும் செல்வி ஆர். துளசிதேவி, கதவு எண். 340, துளசி இல்லம், கருங்கல்பட்டி மெயின் ரோடு, சேலம் என்பவர்கள் மேற்கண்ட 1.7650 ஏக்கர் பரப்புள்ள ராஜ் துளசி கார்டன் இடத்தில் 30 குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவை வரன்முறைபடுத்தி உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் ந.க.எண். 1698/2023 நா.மா, நாள் 15.02.2024 ஆணையில் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு வரைபட எண். ம.வ/(வரன்முறை) நாமா. எண். 06/2024 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு சாலைகள் தானப்பத்திர ஆவண எண். 464/2024 நாள் 27.01.2024–இன்படி மனைப்பிரிவில் பொது பாதைகள் 17498.75 சதுரடி மற்றும் பூங்காவிற்காக 1625 சதுரடி இடமும் ஆக மொத்தம் 19123.75 சதுரடி பரப்பளவுள்ள காலியிடம் ஆணையாளர் பெயரில் தானமாக பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்பு ஒப்புதல் பெறுவதற்கும் மற்றும் மனுதாரரின் வரன்முறைப்படுத்தக்கோரிய மனைகள் 22, 23, 24, 25, 26, 27, 28 மற்றும் 29 மனைகளுக்கு உரிய கட்டணம் வசூல் செய்து மனைவரன்முறை ஒப்புதல் வழங்குவதற்கும், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. அரசாணை (நிலை) எண். 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)–த் துறை, நாள் 04.05.2017.

2. அரசாணை (நிலை) எண். 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)—த் துறை, நாள் 13.10.2017.
3. அரசாணை (நிலை) எண். 55 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)—த் துறை, நாள் 02.05.2018.
4. அரசாணை (நிலை) எண். 21 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)—த் துறை, நாள் 05.02.2019
5. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் ந.க.எண். 1698/2023 நா.மா, நாள் 15.02.2024 மனைப்பிரிவு வரைபட எண்.ம.வ/(வரன்முறை) நாமா. எண். 06/2024 ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்கண்ட மனைப்பிரிவிலுள்ள மனைகளை மனைவரன்முறை ஒப்புதல் வழங்குவதற்கும், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கும் மன்றம் முடிவு செய்யலாம்.

(0728/24/எப்1)

**தீர்மானம் எண். 578**

இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சியின் 2024—2025—ஆம் நிதியாண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, ஆரம்ப கல்வி நிதிகளுக்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு நகர் மன்றத்தின் ஒப்புதலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(630/24/பி1)

**தீர்மானம் எண். 579**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/— முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.